# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 96/2026

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : அறிவழகன்

Father's Name : பூமிபாலகன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2026 ம் தேதி கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது

த.காவலர் சத்தியராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் குமார் ஆகியோருடன் கஞ்சா தடுப்பு ரோந்து அலுவலாக தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு வடக்கு தெரு, பகவதியம்மன் கோவில் வடபுறம் எதிரே கண்காணித்தபோது, அங்கிருந்த ஒரு நபர் பாலித்தீன் கவருடன் இருந்தவர் எங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, அவர் பெயர் சசிக்குமார் எனக்கூறினார். அவர். ஆஜர் எதிரிதான். கையில் வைத்திருந்த பாலித்தீன் கவரை சோதனை செய்ய வேண்டும் எனவும், அதை நீதிபதி முன்போ, வருவாய் வட்டாட்சியர், டிஎஸ்.பி முன்போ சோதனை செய்ய வேண்டுமா என கேட்டபோது, உதவி ஆய்வாளரிடம் சோதனை சம்மதம் தெரிவித்ததால் சோதனை சம்மதக் கடிதத்தின் பேரில் அவர் வைத்திருந்த பாலித்தீன் கவரில் கஞ்சா தூள் இருந்தது.

2. கொண்டு சென்ற தராசில் நிறுத்து பார்த்தபோது 90 கிராம் கஞ்சாத்தூள் இருந்தது. எதிரி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருப்பதாக குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் கைதுக்கான கைது செய்தும், 90 கிராம் கஞ்சாத்தூளிலிருந்து தலா 20 கிராம் வீதம் கஞ்சாத்தூளை ரசாயன பகுப்பாய்விற்காக இரண்டாக பிரித்த கட்டி SHO சீல் வைத்தும், தனி நபர் யாரும் முன்வராததால் சத்தியராஜ் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் சத்தியராஜ் என்பவர் கையொப்பம் செய்தார். **கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டவந்து, நிலைய கு.எண்.30/2026, ச.பி.8(C)20,(b),(II)(A) NDPS ன்படி வழக்க பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 96/2026

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில் குமார் |
| Father's Name | : | பிச்சை முத்து |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2026 ம் தேதி கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் அறிவழகன், த.கா. சத்தியராஜ் ஆகியோருடன் கஞ்சா

தடுப்பு ரோந்து அலுவலாக தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு வடக்கு தெரு பகதியம்மன் கோவில் வடபுறம் கண்காணித்தபோது, அங்கிருந்த ஒரு நபர் பாலித்தீன் கவருடன் இருந்தவர் எங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, அவர் பெயர் சசிக்குமார் எனக்கூறினார். அவர். ஆஜர் எதிரிதான். கையில் வைத்திருந்த பாலித்தீன் கவரை சோதனை செய்ய வேண்டும் எனவும், அதை நீதிபதி முன்போ, வருவாய் வட்டாட்சியர், டிஎஸ்.பி முன்போ சோதனை செய்ய வேண்டுமா என கேட்டபோது, என்னிடம் கேட்டபோது சோதனை சம்மதம் தெரிவித்ததால் சோதனை சம்மதக் கடிதம் பெறப்பட்டது. **அந்த சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அவர் வைத்திருந்த பாலித்தீன் கவரில் கஞ்சா தூள் இருந்தது. கொண்டு சென்ற தராசில் நிறுத்து பார்த்தபோது 90 கிராம் கஞ்சாத்தூள் இருந்தது. எதிரி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருப்பதாக குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் கைதுக்கான கைது செய்தும், 90 கிராம் கஞ்சாத்தூளிலிருந்து தலா 20 கிராம் வீதம் கஞ்சாத்தூளை ரசாயன பகுப்பாய்விற்காக இரண்டாக பிரித்த கட்டி SHO சீல் வைத்தும், தன்நபர் யாரும் முன்வராததால் சத்தியராஜ் மற்றும் அறிவழகன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டவந்து, நிலைய கு.எண்.30/26, ச.பி.8(C)20,(b),(II)(A) NDPS ன்படி வழக்கு பதிவு செய்தேன் **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தக்க பிணையில் எதிரியை விடுவித்தேன். பின்னர் வழக்குச் சொத்தினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 90 கிராம் கஞ்சாத்தூள் அ.சா.பொ.1 ( கஞ்சாத்தூள் அழிக்கப்பட்டது ) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் நான் சாட்சிகள் அறிவழகன், சத்தியராஜ்ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து

எதிரி மீது கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**